DIRECTORATE OF VIGILANCE & ANTI - CORRUPTION

பத்திரிகை செய்தி

தமிழகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையால் 13.06.2026 முதல் 19.06.2026 வரை மேற்கொள்ளப்பட்ட 7 பொறிவைப்பு நடவடிக்கைகள்

1. 15.06.2026 அன்று திருப்பூர் மாவட்டத்தில் வாரிசு சான்றிதழ் வழங்க திரு.ஞானசேகர், கிராம நிர்வாக அலுவலகர், தொட்டியபாளையம் கிராமம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் ரூ..4,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

2. 16.06.2026 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் வீட்டுமனை அளவீடு செய்ய திரு.செல்வராஜ், சர்வேயர், திருமயம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் ரூ.14,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

3. 17.06.2026 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் பட்டா மாற்றம் செய்ய திருமதி.கலைச்செல்வி, கிராம நிர்வாக அலுவலர் கண்டமங்கலம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் ரூ.8,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

4. 17.06.2026 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் நெல் கொள்முதல் பில் விடுவிப்பதற்கு திரு.சுமன்ராஜ், பில் கிளர்க், அக்கைாப்பட்டி, நெல் கொள்முதல் நிலையம், திண்டுக்கல மாவட்டம் அவர்கள் ரூ.20,000/- G-Pay மூலமாக லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

5. 18.06.2026 அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் கூட்டு பட்டாவில் பெயர் சேர்ப்பதற்காக திரு.செந்தில்குமார், கிராம நிர்வாக அலுவலர் முடிவைத்தாங்கல், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் திரு.சுப்பையா, உதவியாளர் (தனிநபர்) என்பவர் மூலமாக ரூ.9,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது இருவரும் கைது செய்யப்பட்டனர்.

6. 19.06.2026 கோயம்புத்தூர் மாவட்டத்தில் 60 KW Solar Panel Net Meter பரிந்துரை செய்ய திரு.கதிர்வேல், உதவி செயற்பொறியாளர், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம் சரவணம்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் ரூ.90,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

7. 19.06.2026 சென்னையில் புதிய மின் இணைப்பு வழங்க திரு.ஜமாலுதீன், வணிக ஆய்வாளர், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் திருவேற்காடு, சென்னை மாவட்டம் அவர்கள் ஒப்பந்த ஊழியர் திரு.வினோத் என்பவர் மூலமாக ரூ.15,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது இருவரும் கைது செய்யப்பட்டனர்.

மூன்று ஊழல் வழக்குகளில் 13.06.2026 முதல் 19.06.2026 வரை நீதிமன்றத்தால் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் விபரம்

1. கரூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறைக்கு ஒதுக்கீடு செய்த அரசு ஆவணங்களில் திருத்தம் செய்த அப்போதைய கரூர் மாவட்ட ஆதிதிராடர் மற்றும பழங்குடியினர் துறையின் மாவட்ட அலுவலர் திரு.ஜவகர், தச்சு மற்றும் கொள்ளு தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் உப தலைவர்கள் திரு.கணேசன் மற்றும் திரு.தங்கவேல் ஆகியோர்களுக்கு தலா 4 ஆண்டுகள் சாதாரண சிறைத் தண்டனையும் திரு.ஜவகர் மற்றும் திரு.கணேசன் ஆகியோர்களுக்கு தலா ரூ.3,30,000/- அபராதமும், திரு.தங்கவேல் அவருக்கு ரூ.1,20,000/- விதித்து 18.06.2026 அன்று தீர்ப்பளித்தது.

2. திருநெல்வேலி ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்புநீதிமன்றம் நில மதிப்பீட்டை குறைவாக காண்பித்து அரசுக்கு வரவேண்டிய வருவாயை இழப்பீடு செய்த காரணத்திற்காக அப்போதைய முன்னாள் களக்காடு பேரூராட்சி தலைவர், முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் ரூ.31,000/- அபராதம் விதித்து 19.06.2026 அன்று தீர்ப்பளித்தது.

3. திருவாரூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் லஞ்ச (கையூட்டு) வழக்கில் திரு.ராமலிங்கம், இளநிலை பொறியாளர், விவசாய பொறியியல் துறை, திருவாரூர் மாவட்டம் அவர்களுக்கு 4 ஆண்டுகள் சாதாரண சிறைத் தண்டனையும் மொத்தம் ரூ.12,000/- அபராதமும் விதித்து 19.06.2026 இன்று தீர்ப்பளித்தது

———